# விடியல்

## The Dawn

இதழ்-81, ஜனவரி-2016

__கௌரவ ஆசிரியர்__
முனைவர் வே. இராதாகிருஷ்ணன்
கல்லூரி முதல்வர்

__ஆசிரியர்__
முனைவர் சி. ஆர். சுரேஸ்
துறைத்தலைவர்

__இணையாசிரியர்__
முனைவர் த. சுந்தரராஜ்

__ஆசிரியர் குழு__

| | |
|---|---|
| திரு. வீ. முருகானந்தம் | முனைவர் த. கண்ணன் |
| திருமதி. சாந்தி | திரு. ப. ராஜேஷ் |
| முனைவர் து. சரஸ்வதி | முனைவர் பா. ராஜேஷ் |
| முனைவர் ரவிச்சந்திரன் | முனைவர்ம.லோகேஸ்வரன் |
| முனைவர் ந. சங்கீதா | திரு. மு. சதீஸ்குமார் |
| திரு. செ. தங்கராஜ் | திருமதி. ப. பிரதிபா |
| முனைவர் முப்பிடாதி | திரு. சத்தியராஜ் |

## தலையங்கம்

தை மாதத்தில் தமிழர்கள் விசேடமாக கொண்டாடும் பொங்கல் விழா பிறந்தது எப்படி? இலக்கிய காலத்திலேயே இந்திர விழா என்ற பெயரில் இவ்விழா இருந்துள்ளது. காவிரிப்பூம்பட்டினத்தில் இந்த விழா நடத்தப்பட்டுள்ளது. அக்காலத்தில் 28 நாட்கள் கொண்டாடியதற்கான சான்று இருக்கிறது.

மழைக்குரிய தெய்வம் இந்திரன். அவனை வழிபட்டால்,மேகம் மும்மாரி பெய்து, பயிர் பச்சை செழிக்கும் என நம்பி மக்கள் இதனை, இந்திர விழாவாகக் கொண்டாடினர். அகத்திய முனிவர் இந்திரனுக்கு அழைப்பு விடுத்து அவன் பூம்புகாருக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது. காலப்போக்கில் சூரியனைப்பற்றிய அறிவு மக்களுக்கு வந்தவுடன், தங்கள் கண் முன் காட்சி தரும் அந்த கடவுளுக்கு பொங்கல் படைத்து, தமது நன்றியை விவசாயிகள் தெரிவிக்கும் பொங்கல் திருநாளாக மக்கள் வழிபட துவங்கிவிட்டனர். இப்போது நாம் போகிப்பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாட்கள் மட்டுமே இவ்விழாவை கொண்டாடுகிறோம்.

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power

வெளியீடு:
**தமிழ்த்துறை,**
**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி** (தன்னாட்சி)
**திருச்செங்கோடு–637215. தமிழ்நாடு, இந்தியா.**
**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in
**E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.

புதுப்பானையில் புது அரிசியிட்டு, கரும்பு, மஞ்சள் கிழங்கு கட்டி, சூரியனை வழிபட்டு சமைக்கும் — தைப்பொங்கல்.

உழவுத்தொழிலுக்கு உதவியாகயிருக்கும் கால் நடைகளுக்காக கொண்டாடும் — மாட்டுப்பொங்கல்.இறுதியாக,உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பொது இடங்களுக்கு குடும்பத்தாருடன் சென்று, இனிப்பு மற்றும் பரிசுப்பொருட்கள் தரும் — காணும் பொங்கல்.




ஜாதி மத பேதமின்றி சமத்துவம் வளர்க்கும் நோக்கோடு துவக்கப்பட்டது தான் பொங்கல் விழா. இயற்கையையும் உழைப்பையும் மையமாக வைத்து கொண்டாடப்படும் — பொங்கல் விழா நல்வாழ்த்துக்கள்!


## சென்னை வெள்ளம்

சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளம் பலத்த மழை காரணமாக மாட்டுமே ஏற்படவில்லை என்று மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தின் 2015க்கான பருவநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் ஏற்பட்ட மிகக் கடுமையான மழை, வெள்ளத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் வீடுகளையும், உடமைகளையும் இழந்தனர்.

இந்த மழை, வெள்ளம் குறித்து புவி அறிவியல் அமைச்சக அறிக்கையில் கூறியிருப்பதாவது, மிகக் கன மழை காரணமாக மட்டுமே சென்னையில் வெள்ளம் ஏற்படவில்லை. போதிய வடிகால் வசதிகள் இன்மை, செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பியிருந்தது போன்றவையும் காரணங்கள் என்று கூறப்பட்டுள்ளது.









# உள்ளடக்கம்


✿ கவிதை..............................04-13

❄ சிறுகதை..............................14-17

❋ கட்டுரை..............................17-23

⁂ பொது அறிவு.....................23-31

பேசும்படம் (Photography)...............32

⌘ தமிழ்த்துறை நிகழ்வுகள்




# கவிதைகள்

## தாய்-தந்தை

**அ. சுகேசன்**
முதலாம் ஆண்டு வேதியியல்

தமிழர் வாழும் திருநாட்டில் – நல்ல
தமிழ் வாழ்கிறது
தமிழ் தந்த உயிரினால் – இங்கு
நான் வாழ்கிறேன்
அமிழ்தம் போன்ற தமிழால் – தமிழ்
நாடு சிறக்கிறது
தமிழ் பேச்சை இங்கு பேசும்போது –
இங்கு நான் சிறக்கிறேன்
நாட்டின் நிலைமை இப்படியா
நாட்டைக் காக்கும் நாயகர்கள்
வீட்டைக் காக்க மறுக்கிறார்கள்
விட்டைக்காக்கும் சில சுயநலவாதிகள்
நாட்டை மறக்கிறார்கள்
மக்கள் பணத்தை சுரண்டுவோர்
விமானத்தில் பறக்கிறார்கள்
கடனால் ஏழை விவசாயிகள்
அவமானத்தால் உயிர் இறக்கிறார்கள்
உலக நண்பர்கள் தினம்
நல்ல நண்பன் எதுவும் இன்றி
எதையும் செய்வான்
எப்பொழுதும்
எதையும் எதிர்பார்க்கவும் மாட்டான்
எதிரியாய் பார்க்கவும் மாட்டான்
தோல் கொடுக்கத் தோழனும்
தோள் சாயத்தோழியும்
கிடைத்தால்
அவர்கள் கூடத் தாய்-தந்தை தான்.

## விடியலே

**சே. நந்தினிதேவி**
இளங்கலை தமிழ் இரண்டாம் ஆண்டு

நாம் தினமும் காலையில் எழுந்து
இரவில் மடியும் மனிதர்கல்
ஒரு நாள் நாம் என்ன சாதித்தோம்
என்று நினைத்தது உண்டா
நாம் சாதிக்க பிறந்தவரா
இல்லை சாதிப்பவரா
தெரியவில்லை
ஆனால் விடியலோ விடிகிறது
மனிதனின்
விடியல் விடியவில்லையே
விடியல் விடிகிறது என நாம் நினைத்து
ஒவ்வொரு நிமிடமும் வீணாக்குகிறோம்
நாம் எப்போது விடியலை
விடிய வைக்க எண்ணுகிறோமோ
அன்று மலரும் விடியல்.



# ஒரு செம்மொழியால் செத்துக்கொண்டிருக்கும் கூட்டம்

**த. சுந்தரராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

இருத்தோராம் நூற்றாண்டின்
பெருந்துயர்
ஒரு செம்மொழியால் நிகழுமென்று
யாரும் யூகிக்கவில்லை.

வெட்கப்படத் தெரிந்த மனிதனை
ஜீவராசிகளுக்கு வாழ்வளிக்கும்
தாவரங்களை
பூமிக்குப் பாரமாய் வளரும்
கட்டிடங்களை
படிக்கவே பெருவிருப்போடு
பலரும் சென்றுகொண்டிருக்க
எந்தப் பறவையும் தீண்டாது ஒதுக்கும்
நெல்லொடு கலந்த
சிறு கல்லாகக் கிடந்தது
இந்த மொழி.

இந்தக் கல்லுக்கும்
ஈராயிரமாண்டு வரலாறு உண்டு
இந்தக்கல்லில்
வீரம் உண்டு
நியாயம் உண்டு
ஆத்திகம் உண்டு
நாத்திகமும் உண்டு.
எல்லாவற்றிற்கும் மேலாக
மானுடமே
இதில் தான் தளிர்த்தது என்று
நொண்டிக்கோழியாய் கிடந்த எங்களை
இந்த மொழியைப் படிக்க
இழுத்து வந்தது ஒரு கூட்டம்.

அதே கூட்டம் தான்
ஈன்ற தாயையும்
மழலையில் சுவைத்த மண்ணையும்
இளமையில் சுழன்ற பிரதேசத்தையும்
இதழில் தவழ்ந்த வார்த்தையையும்
இந்தக் கல்லோடு இணைத்து
வறட்டுக் கிளர்ச்சியூட்டியது
படிக்கின்ற காலத்தில்.

இப்போதும் அந்தக்கூட்டம்
அதே வறட்டுக்கிளர்ச்சியை
உணர்ச்சிப்பூர்வமாக
செய்து கொண்டுதானிருக்கிறது
சின்னதாய் ஒரு மாற்றம்
எங்கள் முன்னோர்கள் இருந்த
அக்கூட்டத்தில்
இப்போது நாங்கள்.



கட்டிடம் படித்தவனுக்கு
நாற்பதாயிரமும்
மருத்துவம் படித்தவனுக்கு
ஐம்பதாயிரமும்
கிடைக்கும் போது,
மானுடம் பேசும்
மொழி-இலக்கியம் படித்தவனுக்கு
நான்காயிரம் கிடைத்தால்...
அவன் வயித்துப்பாட்டுக்கு
இதைவிட
வேறு என்ன வழி இருக்கக் கூடும்?

## மூன்றெழுத்து விருப்பம்

**வே. நர்மதா**

இளங்கலை கணிதம் இரண்டாமாண்டு

விரும்பிய மூன்றெழுத்து வெற்றி
தெரிந்த மூன்றெழுத்து கல்வி
பயன்படுத்திய மூன்றெழுத்து அறிவு
அனுபவித்த மூன்ரெழுத்து நட்பு
அரவணைத்த மூன்றெழுத்து அன்பு
ஆதரித்த மூன்றெழுத்து கருணை
இதை அனைத்தையும் ஒன்றாய்
கண்ட மூன்றெழுத்து அம்மா...

## காகிதம்

ஒவ்வொரு மனித
வாழ்க்கையில் ஒரு காகிதம்
அதில் கவிதை எழுதிய
கைகளை விட
அதை கசக்கி எறிந்த
கைகளே அதிகம்.

## உலகம் வசப்படும்

**இரா. சரவணன்**

இளங்கலை கணிதம் இரண்டாம் ஆண்டு

மேகத்தை தாய் வீடாக கொண்டு
மென்மையாக விழும் மழைத்துளிக்கு
தெரிவதில்லை நாமும்
ஒரு நாள் முத்தாவோம் என்று
மண்ணில் பிறந்த கற்களுக்கும்
தெரிவதில்லை நாமும்
ஒரு நாள் சிலையாவோம் என்று
பத்து மாதம் தாயின் வயிற்றில் பிறந்த
உனக்கும் கூட
தெரிவதில்லை நாமும்
ஒருநாள் தலைவராவோம் என்று
தகுந்த காலத்தில்
தவறாது அறிவை வெளிப்படுத்து
உலகம் கூட உனக்கு அடிபணியும்
அவற்றை முறையாய் வழிநடத்து.

## நட்பு

**ப.தேவிகா**

இளங்கலை கணிதம் இரண்டாம் ஆண்டு

இரவில்
நான் நிலவைப் பார்த்துக் கேட்டேன்

நீ ஏன் இவ்வளவு பிரகாசமாக
இருக்கிறாய்? என்று
நிலவு சொல்லியது,
நண்பர்களாகிய நட்சத்திரங்கள்
என் அருகில் இருப்பதனால் என்று.
நண்பன்
உன்னைப் பார்த்ததும் அழுதுவிட்டேன்
எங்கே நான்
தோற்றுவிடுவேனோ என்று
திரும்பி பார்த்தேன்
உதவுவதற்கு யாருமில்லை
என்று அச்சப்படும் சமயத்தில்
என் நண்பன்
என் கவலைகளை எல்லாம்
சிறுதுண்டு பேப்பரில்
எழுதிகொடுத்தான்
அதனால் வெற்றி பெற்றேன்
பொதுத்தேர்வில்.

## உன்னால் முடியும்

**கே.எஸ்.ரம்யா**
இரண்டாம் ஆண்டு கணிதம்

உன்னால் முடிந்ததை
உனக்கு தெரிந்ததை
உன்னால் முடியும் வரை முயற்சி செய்
உறங்கா நிலவுக்கும்,
ஒரு நாள் விடியல்
உறங்கும் உன் விழிகளுக்கோ
மறுநாளே விடியல்
விழித்தெழு இந்த விடியல் உனக்காக
உலகம் ஒரு புதிரான புத்தகம்
புரியும் வரை புரட்டிக்கொண்டே இரு
தெரியாது என்பது
செவியறியா வார்த்தை
ஒரு போதும் உச்சரிக்க வேண்டாம்,
உன் உதடுகள் கூட.
உன்னால் முடியும் என்பது நான்
அறிந்த உண்மை
அதை நீ அறிந்தால்
வெற்றிநடை போடலாம்
உன் பாதைகள் யாவும்
வெற்றி மாலை சூடும்.

## முயற்சி

**ரா. ரூபினி**
இரண்டாம் ஆண்டு கணிதம்

முதல் முயற்சியில் வெற்றி
பெறுபவன் அதிர்ஷ்டசாலி
இரண்டாம் முயற்சியில் வெற்றி
பெறுபவன் திறமைசாலி
மூன்றாம் முயற்சியில் வெற்றி
பெறுபவன் அனுபவசாலி
நான்காம் முயற்சியில் வெற்றி
பெறுபவன் தைரியசாலி
ஆனால்
இறுதிவரை போராடி வெற்றி
பெறுபவன் தான் சாதனையாளன்.

## நினைத்தால் மறப்பாய்

**நா. சுபகீதா**
உயிர் தொழில்நுட்பவியல் அ பிரிவு

அன்னையை நினைத்தால்
அனைத்தையும் மறப்பாய்
காதலை நினைத்தால்
கடமையை மறப்பாய்
உண்மையை நினைத்தால்
உறவை மறப்பாய்
உன்னை நினைத்தால்
உலகம் மறப்பாய்
அழகை நினைத்தால்
அறிவை மறப்பாய்
இறைவனை நினைத்தால்
இன்பத்தை மறப்பாய்
நட்பை நினைத்தால்
உன்னை மறப்பாய்
தந்தையை நினைத்தால்
தகுதியை வளர்ப்பாய்
வெற்றியை நினைத்தால்
தோல்வியை மறப்பாய்.

## கற்க கசடற

**பே. லோகநாதன்**
இளங்கலை வேதியியல் இரண்டாம் ஆண்டு

கல்வி பாடத்தை கற்கவில்லை
வாழ்க்கைப் பாடத்தை கற்றேன்
நாயை கண்டேன்
நன்றியை உணர்ந்தேன்
கோழியை கண்டேன்
விடியலை கண்டேன்
பசுவை கண்டேன்
அயராது உழைத்தேன்
வேங்கையை கண்டேன்
தைரியம் வளர்த்தேன்
சோம்பலை எரித்தேன்
எறும்பை கண்டேன்
குருவியை பார்த்தேன்
குதூகலம் ஆனேன்
காக்கையை பார்த்தேன்
கடமையை நினைத்தேன்
மனிதனை பார்த்தேன்
மடயனாய் போனேன்.

## தாயின் கருவறை

**மோ. மோனிஷா**
இளங்கலை கணிதம் இரண்டாம் ஆண்டு

தாயின் கருவறையை
பார்த்த பின்பு
ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்....
இருள் நிறைந்து இருப்பது
நரகம் மட்டுமல்ல
சொர்க்கமும் தான் என்று
குழந்தையின் சிரிப்பு
இறைவன் படைத்து
இயல்பு கெடாமல்

தொடரும் பட்டியலில்
இன்றும் இருக்கிறது
குழந்தையின் சிரிப்பு
தேசியகீதம்
தோல்விகள் என்பது
உன்னைத்தூங்க
வைக்கப் பாடும்
தாலாட்டு அல்ல
நீ நிமிர்ந்து
நிற்பதற்கான
தேசியகீதம்.

## ஆசை

மு. நந்தினி
இரண்டாம் ஆண்டு இளங்கலை கணிதம்

இரவின் மீது ஆசை கொண்டேன்
நிலவாக இருக்க
மழையின் மீது ஆசை கொண்டேன்
துளியாக இருக்க
மலரின் மீது ஆசை கொண்டேன்
இதழாக இருக்க
வண்ணத்துபூச்சியின் மீது
ஆசை கொண்டேன்
வண்ணமாக இருக்க
காற்றின் மீது ஆசை கொண்டேன்
உன் மூச்சாக இருக்க.

## சாதனை

ச. ரம்யா
முதலாம் ஆண்டு தமிழ் இலக்கியம்

பேருந்தில் இடம் பிடிப்பதற்காக
முந்தத் துடிக்கும் உன் மனம்
சாதனை என்னும் சிகரத்தை தொட
முந்தவில்லையே
இன்பத்தை நீ தேடிப் போகாதே
நீ இருக்கும் இடத்தை
இன்பமாக மாற்றிக்கொள்
வெற்றிகளை தோல்விகளாக
மாற்றுவது சாதனை அல்ல
தோல்விகளை வெற்றிகளாக
மாற்றுவதே சாதனை.

## விவசாயம் காக்கப்படும்

பெ. லோகநாதன்
இளங்கலை மூன்றாம் ஆண்டு வேதியியல்

விஞ்ஞான வளர்ச்சியா
விபரீத முயற்சியோ
விவசாயம் அழிக்கிறது
கார்ப்பரேட் கம்பெனியிடம்
காலத்துக்கும் அடிமையானோம்
கால்வயிற்று கஞ்சிக்கும்
காணாமல் போனோம்
நிமிர்ந்த நின்ற நெற்பயிரோ
தரையில் தலைகவிழ்ந்து கிடக்கிறது
நிறைய ஊதியம் உண்டு

உண்பதற்க்குதான் உணவு இல்லை
உலகுக்கு உணவளித்தவன்
ஒரு பிடி சோறு இல்லாமல்
உயிர்விடுகிறான் உன்னத பூமியில்
கத்தி முனையில்
நிற்கும் விவசாயிகள்
கலப்பை கொண்டு
ஏர் உழுதோம்
கணக்கிலடங்கா பட்டினிச்சாவு
கதிரவனுக்கு எங்கள் மீது
பிரியம் அதிகம்
எங்கள் பயிர்களை
சுட்டெரித்து விளையாடுகிறான்
வருண பகவானுக்கோ
எங்களிடம் வர விருப்பமில்லை
கத்தியில்லை யுத்தமில்லை
வறுமைச்சாவு அதிகம்
விவசாயின் நிலையோ
காய்ந்த கண்ணீர்
பூமிதான் அதிலேயும்
தண்ணீர் இல்லை
வரும் விவசாய மண்ணில்
வரும் தலைமுறை நம்மை
நினைக்க வேண்டாம்
அவர்களை நினைத்தால் போது
விவசாயம் காக்கப்படும்.

## தாயின் கருவறை

**மோ. மோனிஷா**
இளங்கலை கணிதம் இரண்டாம் ஆண்டு

தாயின் கருவறையை
பார்த்த பின்பு
ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன்...
இருள் நிறைந்து இருப்பது
நரகம் மட்டுமல்ல
சொர்க்கமும் தான் என்று
குழந்தையின் சிரிப்பு
இறைவன் படைத்து
இயல்பு கெடாமல்
தொடரும் பட்டியலில்
இன்றும் இருக்கிறது
குழந்தையின் சிரிப்பு
தேசியகீதம்
தோல்விகள் என்பது
உன்னைத்தூங்க
வைக்கப் பாடும்
தாலாட்டு அல்ல
நீ நிமிர்ந்து
நிற்பதற்கான
தேசியகீதம்.

## அன்பே அழகே

**முகிலன்**
இளங்கலை கணிதம் இரண்டாம் ஆண்டு

அழகை எதிர்பார்க்கும்
இதயங்களிடம்
அன்பை காட்டாதே
உன்னிடம்
அன்பை வைக்கும்
இதயத்திடம் அழகை
எதிர்பார்க்காதே
அப்பா
மாதம் பத்து மனதிலும்
மீதம் முழுதும் தோளிலும் சுமந்து
தன்னலம் மறந்து நம் நலம் நாடும்
நல் ஆசான் – அப்பா
அமைதி உன்னை
திட்டுபவர்களிடமும்
எரிச்சல்
மூட்டுபவர்களிடமும்
விவாதம் செய்தால்
உன் உடலுக்கும்
மனதுக்கும் தான்
வீண்பாதிப்பு உண்டாகும்.

## பேதம் இல்லாத காதல்

**க.பிரியங்கா**
இரண்டாம் ஆண்டு கணிதம் அ பிரிவு

நிறமிழந்த கனவுகளும்
நினைவழிந்த சுவடுகளும்
நமக்கு நம்மையே
அடையாளப் படுத்தும்
அன்பின் பரிவர்த்தனையில்
ஆசைப்பூக்கள் ஆயிரம் பூக்கும்
நிழல் தேடி அலையும்
நேசம் பூத்த நெஞ்சம்
இளைப்பாற எத்தளிக்கும்
உந்தும் மன உணர்வுகளால்
காதல் நெஞ்சம் பேதலிக்கும்
நீயே நானாகி நானே நீயாகையில்
ஏது பேதம் நமக்குள்.

## மனநலம் பாதித்த ஒருவனின் மனது

**கு. பூபதிராஜா**
இரண்டாம் ஆண்டு கணிதம்

தாயும் தந்தையும் புரியாத
பிள்ளையானேன்
ஆசானை அறியும் அருகதை அற்று
போனேன்
அக்கம் பக்கம் மறந்து சுற்றி
திரிகிறேன்
பிறப்பு, பற்றி அறியாது இறப்பு
நோக்காது
என் மனம் காட்டும் பிம்பகளோடும்
சோகத்தில் மண்ணோடும் புரள்கிறேன்
உடையும் அலங்காரமும் இல்லாத
நிலையில்
அடைக்கலம் தேடி அலைகிறேன்

தன்மை என்னுடன் விளையாட
தன்னிலை அறியாத அநாதையாய்
உலவுகிறேன்
மேசை அமர்ந்து கல்வி கற்காத நான்
உலகமெனும் மேடையில் நகைச்சுவை
நடிகர் ஆனேன்
பல பெயர்களால் அழைக்கப்படும்
பல்பொருள் அங்காடி ஆனேன்
இன்னல் நிறைந்த உலகத்தில்
இல்லறம் இல்லா
மகிழ்ச்சியாய் வாழும்
ஜீவராசியானேன்......

## நண்பா

**எஸ். விக்னேஷ்**
இளங்கலை முதலாம்ஆண்டு வணிகவியல்

கண்ணுக்குத் தெரியும் பார்க்க...
காதுக்குத் தெரியும் கேட்க...
கையிக்கு தெரியும் தொட...
காலுக்குத் தெரியும் நடக்க
ஆனால்
மனதுக்குத் தெரியும்
நண்பா...
உன்னை நினைக்க...

## அன்பின் வடிவங்கள்

**எஸ். கிருத்திகா**
இரண்டாம் ஆண்டு கணிதம்



அன்று நம் தொப்புள் கொடியை
அறுத்தது
நம் உறவை பிரிக்க அல்ல
அது நம் பாசத்தின் தொடக்கத்திற்கு
வெட்டப்பட்ட ரிப்பன்.

மூச்சு நின்றால் மட்டும் மரணமில்லை
சில அன்பான இதயங்களின்
பேச்சு நின்றால் கூட மரணம் தான்

காதலிக்க தெரிந்த போது
காத்திருக்க தெரியவில்லை
காத்திருக்க தெரிந்த போது
காதல் அருகிலில்லை

நட்பு என்பது மலரைப் போல் அல்ல
ஒரு நாளில் பூத்து உதிர்ந்துவிடுவதற்கு
அது வானில் இருக்கும்
நட்சத்திரத்தைப் போல்
வானம் இருக்கும் வரை இருக்கும்.

## கடமை

மோ. ரம்யா
இளங்கலை முதலாம் ஆண்டு கணிதவியல்

இயற்கை என்பது இனிமை
செயற்கை என்பது புதுமை
கல்வி என்பது இளமை
அறிவு என்பது திறமை
நட்பு என்பது நன்மை
வெற்றி என்பது நேர்மை
தாங்குதல் என்பது வலிமை
வேலை என்பது கடமை
சேமிப்பு என்பது கடுமை
இதை செய்தால்
நம் வாழ்க்கை செம்மை
இதை அனைத்தையும் காத்தல்
நம் கடமை.

## ஏழ்மை

எதிர்வீட்டு ஜன்னலில் தான்
எத்தனை சட்டைகள்
என் சட்டையில் தான்
எத்தனை ஜன்னல்கள்

## பேனா

மாணவனின் கையில் பேனா
கண்ணீர் வடிக்கிறது
நாளை அந்த மாணவனின்
கண்களிலிருந்து வரப்போகும்
ஆனந்தக் கண்ணீரை எண்ணி

## ஆசை

மு. நந்தினி
இரண்டாம் ஆண்டு இளங்கலை கணிதம்

இரவின் மீது ஆசை கொண்டேன்
நிலவாக இருக்க
மழையின் மீது ஆசை கொண்டேன்
துளியாக இருக்க
மலரின் மீது ஆசை கொண்டேன்
இதழாக இருக்க
வண்ணத்துபூச்சியின் மீது ஆசை
கொண்டேன்
வண்ணமாக இருக்க
காற்றின் மீது ஆசை கொண்டேன்
உன் மூச்சாக இருக்க.


# சிறுகதை

## உண்மையை யோசி

மு. சாந்தி

மூன்றாம் ஆண்டு தமிழிலக்கியம்

கிராமம் ஒன்றில் இருந்த வயற்காட்டில் ஒரு அழகான கோழிக்குஞ்சு இருந்தது. இதனை மற்ற பிராணிகள் செல்லமாக லிட்டில் சிக்கன் என்றே அழைத்து வந்தன. ஒரு நாள் கோழிக்குஞ்சு இரைதேடி வெகுதூரம் சென்று ஒரு காட்டை அடைந்தது. அங்கு ஒரு மரநிழலில் நின்றது. பறந்து வந்து அதன் மேல் விழுந்தது ஒளி.



அதனைக் கண்டு அலறி அடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது கோழிக்குஞ்சு. என் மேல் சூரியன் விழுந்துவிட்டது அப்பா, அம்மா என்று கூச்சல் போட்ட படி அலறிக் கொண்டிருந்தது.

அப்போது அந்தக் குஞ்சின் நண்பன் சிட்டுக்குருவி வந்து, ஏன் இப்படி அலறுகிறாய்? என்று விசாரித்தது. அப்போது குஞ்சு உனக்குச் சேதி தெரியுமா? என்மேல் சூரியன் விழுந்துவிட்டது. இதோ பாரேன் என்று சூரியனோட ஒரு பாகம் தன் மேல் விழுந்த அடையாளத்தையும் காட்டியது. ஆனால் ஒரு அடையாளத்தையும் காணோம் இருப்பினும் அதை நம்பிய சிட்டுக்குருவி, சரி ஆகட்டும் இதை யாரிடம் போய் சொல்லப் போறே? இவ்வளவு வேகமா ஏன் ஓடறே? பறக்கிறே? என்று விசாரித்தது. நான் நம் மன்னரிடம் தான் சொல்லப்போகிறேன் என்றது கோழிக்குஞ்சு. கோழிக்குஞ்சு நானும் உன்னுடன் வரட்டுமா? என்று சிட்டுக்குருவி கேட்க, வா என்று

அதனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டது.

வழியில் வாத்து, சேவல், முயல், குள்ளவாத்து இவைகளும் வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு பிராணியிடத்திலும் கோழிக்குஞ்சும் சிட்டுக்குருவியும், கோழிக்குஞ்சுமேல் சூரியன் விழுந்துவிட்டது. இதை நாங்கள் மன்னனிடம் சொல்லப் போகிறோம். நீங்களும் வருகிறீர்களா என்று கேட்டுப் பீத்திக்கொண்டன. நாம் இவர்கள் பின்னே போனால் மன்னரைப் பார்க்கலாம் என்ற ஆசையில் மற்ற பறவை இனங்களும் ஒத்துக் கொண்டு அதன் பின்னே போய்க் கொண்டிருந்தன.

வாத்து, முயல் போன்றவை கேட்ட கேள்விகளுக்கெல்லாம் கோழிக்குஞ்சு வழிநெடுகிலும் பதில் சொல்லிக் கொண்டே வந்தது. இனிமே சூரியன் இருக்க மாட்டானோ, இனி நான் எப்படிக் கூவுவது என்று மன்னனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள சேவலும் ஆர்வமாக இருந்தது. நடுவழியில் நரி ஒன்று வந்து கொண்டிருந்தது. நரியின் சாதுர்யமும் தந்திரமும் நமக்குத்தான் தெரியுமே. எதிரில் ஒரு பெரிய பறவைப் படையே வந்து கொண்டிருந்ததைப் பார்த்த நரிக்கு உள்ளுக்குள்ளளேயே சந்தோஷம், இருப்பினும் அதைக் காட்டிக் கொள்ளாமல், அடடா பார்க்க எவ்வளவு நன்றாக இருக்கிறீர்கள். எவ்வளவு மகிழ்ச்சியுடன் காணப்படுகிறீர்கள். எங்கே போகிறீர்கள் நீங்கள் எல்லாரும்? என்று கேட்டது. அதற்கு கோழிக்குஞ்சும் சிட்டுக்குருவியும் நாங்கள் மன்னரைப் பார்த்து கோழிக்குஞ்சு மேல் சூரியன் விழுந்ததைப் பற்றி தெரிவிக்கப் போகிறோம் என்றன.

அப்படியா அரண்மனைக்கு இப்படியே போனால் தூரம் அதிக மாயிற்றே, என்னோடு வாருங்கள் நான் குறுக்கு வழியில் அழைத்துப்போய் நொடியில் அரண்மனை வாசலைக் காட்டுகிறேன் என்று நரி கூறியதை பிராணிகள் அனைத்தும் நம்பி, அதன் பின்னாலேயே போகவும் ஆரம்பித்தன. நரி கொஞ்ச தூரம் சென்றதும் தன் குகையை அடைந்து அதன் கதவைத் திறந்தது. எல்லோரும் இதனுள் செல்லுங்கள் அரண்மனையை அடைந்துவிடலாம் என்றது எல்லோருக்கும் ஒரே குஷி மன்னரைக் காணப்போகிறோம் என்று. நரிக்கும் ஆகா இன்று என் முகத்தை நானே பார்த்துக் கொண்டு விழித்தேன்

போலிருக்கிறது. இன்று நல்ல வேட்டை. தானாகவே எல்லாம் என் வலையில் வந்து விழுந்து விட்டன என்று மகிழ்ச்சி கொண்டது.

பாவம் மன்னரைப் பார்க்கப்போகிறோம் என்று சந்தோஷம் கொண்ட பறவைகள் யாவும் நரியின் நயவஞ்சகத் தனத்தை ஒரு கணம் யோசிக்க மறந்தன. மேலும் சூரியன் வானத்திலிருந்து எப்படி விழும். நேரிடையாகவே பார்க்கமுடியாத பொருள் எப்படி மண்ணில் விழும் என்று யோசிக்காமல் இப்படி வந்து துன்பப்பட நேரிட்டது. நரிக்குப் புரிந்தது, சூரியனாவது மண்ணில் விழுவதாவது. இவர்கள் அனைவரையும் எப்படி தனக்கு விருந்தாக்கலாம் என்று திட்டமிட்டு மாட்ட வைத்துவிட்டது.

**கருத்து**

யார் எது சொன்னாலும் கேட்டுக்கொண்டு, தீர யோசித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும்.

## அணில்

**கு. ரகுராம்**

உயிர் தொழில் நுட்பவியல்

வீட்டில் இருந்து பள்ளிக்கு செல்லும் வழியிலொரு கொய்யா மரத்தை பார்த்து திகைத்து நின்றான் ராஜ் அந்த மரத்தில் ஒரு அணில் நிறைய பழம் பழுத்திருந்ததை ஆர்வமாக தின்று கொண்டிருந்தது. அதை அவன் கல்லெடுத்து எறிந்து விரட்டினான் என்று பெருமையாக தன்னை வகுப்பறையில் தன் தோழர்களிடம் சொன்னான் ராஜ்.



இதை கேட்டு கொண்டிருந்த தமிழ் ஐயா ராஜை அழைத்து, உனக்கு பசித்தால் சாக்லேட், பிஸ்கட் எல்லாம் யார் வாங்கி கொடுப்பார்கள்? என்றார். அம்மா இல்லினா அப்பா என்றான். உடனே, ராஜ் உனக்கு பசித்தால் வாங்கித் தர அப்பா அம்மா இருக்காங்க. ஆனால் அந்த அணிலுக்கு யாரு இருக்கா? ஏன்

அணிலுக்கு அப்பா அம்மா இல்ல. என்றான் ராஜ். அதற்கும் அப்ப அம்மா இருக்காங்க. ஆனால் அணிலுக்கு பசிச்சா சாப்பிடறதுக்கு மரங்களையும் கனிகளையும் படைத்தார். பழங்களைத் தின்னு வாழ அதுகளுக்கு மரம் ஏறும் சக்தியை கடவுள் கொடுத்திருக்கிறார். நம்மை போல அதுகளும் வாழ, நாம் வழிவிடனும்டா ராஜ் என்றார் தமிழ் ஐயா. சரி இனிமேல் துன்புறத்த மாட்டேன் என்றான் ராஜ். மறுநாள் காலையில் பள்ளிக்கு வரும் வழியில் மரத்தை பார்த்து அந்த மரத்தின் நிழலில் நின்றான். அவன் நிற்பதை பார்த்த ஐயா ஏண்டா இங்க நிக்கிற என்றார். இல்லை ஐயா நேத்து இந்த மரத்தில தான் அந்த அணில அடிச்சு விரட்டினேன். இன்னிக்கு அந்த அணில் வந்தவுடன் மன்னிப்பு கேட்கணும் ஐயா என்றான். புன்னகையுடன் பள்ளிக்கு கிளம்பினார் ஐயா.

## கட்டுரை

# நிலுஃபெர் டெமிர்: ஐரோப்பாவின் மனசாட்சியை உலுக்கியவர்



த. சுந்தரராஜ்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

ஒரு செய்தியை பிறருக்கு உணர்த்த கட்டுரை, கதை போன்ற மொழிசார்ந்த வடிவங்களை விட புகைப்படம் என்னும் மொழிசாரா வடிவம் எளிதானது மட்டுமல்ல தெளிவானதும் கூட. ஆயிரம் வார்த்தைகளின் விவரிக்கவேண்டிய ஒரு கருத்தை ஒரே ஒரு புகைப்படத்தில் சொல்லிவிடலாம். ஒரு கருத்தை உணர்வுப்பூர்வமாக

உணர்த்துவதும் புகைப்படங்களே. புகைப்படத்தின் மூலம் இப்பூமியில் வாழும் உயிர்களின் சந்தோஷம், துக்கம் போன்ற உணர்வுகளை எளிதாக பிறரோடு பகிர்ந்துகொள்ள முடிகிறது. மொழி ரீதியான வேறுபாடுகளையும், தடைகளையும் கடந்து மனிதத்தை ஒன்றிணைக்கும் சக்தியாக புகைப்படம் இருக்கிறது. சமீபத்தில் 2015 செப்டம்பர் இரண்டாம் தேதி எடுக்கப்பட்ட ஒரு புகைப்படம் உலகமக்களின் மனதை உருக்கியது. துருக்கியின் போட்ரம் கடற்கரையில் அதிகாலைப்பொழுதில் எடுக்கப்பட்ட அந்தப் புகைப்படத்தில், மூன்று வயதேயான சிரிய நாட்டுச் சிறுவன் அய்லான் குர்தி குப்புறப்படுத்துத் தூங்குவது போல் உயிரற்ற சடலமாகக் கரையொதுங்கிக் கிடந்தான். அப்புகைப்படம் 2015 செப்டம்பர் மூன்றாம் தேதி வியாழக்கிழமை உலக ஊடகங்களின் தலைப்புச்செய்தியாக வந்தது.



ஈராக்கிலும்,சிரியாவிலும் நடக்கும் உள்நாட்டுக் கலவரத்தினால் பாதிக்கப்படும் பொதுமக்கள் கடந்த பல மாதங்களாக ஐரோப்பாவிற்கு அகதிகளாக இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விரு நாட்டிலிருந்தும் ஐரோப்பாவிற்கு அகதிகளாகப் போகும் மக்கள் ஐரோப்பாவையும் மத்தியகிழக்கு நாடுகளையும் இணைக்கும் துருக்கி வழியாகத்தான் சென்றாகவேண்டும். துருக்கியிலிருந்து மிக அருகில் உள்ள கோஸ், சமோஸ், ச்லோஸ், லெஸ்வோஸ் ஆகிய கிரேக்கத் தீவுகள் வழியாகத் தான் ஐரோப்பாவிற்குள் நுழைகின்றனர். இந்த நான்கு தீவுகளும் ஐரோப்பவின் நுழைவு வாயில்களாக உள்ளன. போட்ரமிலிருந்து இரண்டரை மைல் தொலைவில் உள்ள கோஸ் தீவுக்குப்போய் அங்கிருந்து

ஐரோப்பாவிற்கு செல்லும் திட்டத்துடன் கிளம்பிய அய்லான் குர்தியின் குடும்பம் ரப்பர் படகில் பயணித்தது. படகு புறப்பட்ட சிறிது நேரத்திலேயே நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் அய்லானின் குடும்பத்தோடு இன்னும் பலரும் பலியாகினர்.

சிரியாவில் நடக்கும் உள்நாட்டுக் கலவரத்தால் பெரும் பாதிப்புக்குள்ளான அப்பாவி மக்கள் அகதிகளாக வெளியேறிக் கொண்டும், சில நாடுகள் இந்த அகதிகளை தன் நாட்டிற்குள் அனுமதிக்காமல் எல்லைகளில் வேலி அமைத்துத் தடுத்துக்கொண்டும் இருந்த சமயத்தில், வெளியாகிய இந்த புகைப்படம் சிரிய மக்களின் துயரத்தையும், இயலாமையையும் உலக மக்களிடம் எடுத்துச் சென்றது. மனித சமூகத்தின் மனச்சாட்சியை உலுக்கியது. சிரியாவில் நடப்பது உள்நாட்டுக் கலவரம், அதில் நாங்கள் தலையிடமுடியாது என்று கள்ளமௌனம் சாதித்த பிரிட்டன் உள்ளிட்ட சில ஐரோப்பிய நாடுகளின் கல்நெஞ்சத்தைக் கரைத்தது இந்தப் புகைப்படம் தான். இந்தப் புகைப்படத்தைக் கண்டு உலக ஊடகங்களும் மக்களும் சிரிய அகதிகள் குறித்து அக்கறை கொள்ளத்தொடங்கினர். ஊடகங்கள் அகதிகளின் நிலை குறித்து அதிகம் விவாதித்தன. இப்புகைப்படத்தைப் பார்த்து மனசாட்சியுள்ள மனிதகுலம் கொடுத்த அழுத்தத்தால் எல்லையில் போட்டிருந்த வேலிகளைக் கலைந்து சிரிய அகதிகளை இருகரம் நீட்டி அழைத்தது ஐரோப்பா.

தொடக்கத்தில் இப்புகைப்படத்தை பத்திரிகையில் வெளியிடுவதில் இரு வேறு கருத்துக்கள் நிலவின. சிறுவனின் சுயமரியாதைக்கு கலங்கம் ஏற்படுத்துவதாகவும், அவனது குடும்பத்தின் வேதனையை பொருளீட்டுவதற்கு பயன்படுத்துவதாகவும் அமைந்து விடும் என சில ஊடகங்கள் இந்த புகைப்படத்தை வெளியிடுவதைத் தவிர்த்தன. இந்தப்புகைப்படத்தை வெளியிடுவதன் மூலம் அகதிகளின் அவலம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும். மேற்கத்திய நாடுகளின் புலம்பெயர்வோர் கொள்கையினால் ஏற்படும் விளைவு இது, மக்கள் இதைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என்று பெரும்பாலான பத்திரிகைகள் வெளியிட்டன.



இருபத்தோராம் நூற்றாண்டில் மனித குலத்தின் மனசாட்சியை உலுக்கிய இந்த புகைப்படத்தை எடுத்தவர் 29 வயதான ஓர் இளம் (பெண்) புகைப்பட நிருபர் நிலூ்ஃபெர் டெமிர். துருக்கியைச் சேர்ந்த டோகன் செய்தி நிறுவனத்தின் (DHA- Doğan Haber Ajansı) புகைப்பட நிருபராகப் பணியாற்றும் நிலூ்ஃபெர் டெமிர், ஈராக், சிரிய அகதிகள் குறித்து புகைப்படம் எடுக்கும் பொறுப்பை கவனித்து வந்தார். குறிப்பாக துருக்கியின் போட்ரம் வழியை ஐரோப்பாவிற்குப் போகும் அகதிகளையும், அவர்களின் நிலையையும் படமெடுத்துக்கொண்டிருந்தார். அப்பணியை மிகுந்த ஈடுபாட்டோடும் பொறுப்புணர்வோடும் செய்துகொண்டிருந்த நிலூ்ஃபெர் டெமிருக்கு செப்டம்பர் இரண்டாம் தேதி அதிகாலையில், போட்ரம் கடற்கரை அருகே இரண்டு படகுகள் கவிழ்ந்துவிட்டதாக தகவல் கிடைத்தது. உடனடியாக போட்ரம் கடற்கரைக்குச் சென்ற நிலூ்ஃபெர் டெமிர், அங்கு நடந்ததைப் பற்றி அவர் பணியாற்றும் டோகன் (DHA) மற்றும் வைஸ் நியூஸ் (Vice News) ஆகிய செய்தி நிறுவனங்களுக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு தெரிவித்தார்.

***டோகன் & வைஸ்: அந்தக் காட்சியை பார்த்தவுடன் உங்கள் மனம் திடுக்கிடவில்லையா, எப்படி இந்தப் புகைப்படத்தை எடுத்தீர்கள்?***

**நிலு்ஃபெர் டெமிர்:** அனேகமாக ஒவ்வொரு நாளும் போட்ரம் கடற்கரைக்குச் செல்வேன், அங்கு கடந்த காலங்களில் பல சடலங்களைப் பார்த்திருக்கிறேன். அவற்றையெல்லாம் நூற்றுக்கு மேற்பட்ட புகைப்படங்களில் பதிவும் செய்திருக்கிறேன். ஆனால் முதல் முறையாக மூன்று வயதுச் சிறுவனின் சடலத்தைப் பார்த்தது இப்போது தான். அய்லானின் சடலத்தைப் பார்த்த போது என் இரத்தம் உறைந்தது போன்று உணர்ந்தேன். என் பத்திரிக்கை வாழ்க்கையில் அது ஒரு சோகம் நிறைந்த இருண்ட நாள். அகதிகளின் நிலை பற்றி ஒரு பத்திரிக்கையாளராக அங்கிருந்து டோகன் நிறுவனத்திற்கு தொடர்ந்து செய்தி அளித்து வருகிறேன். எனவே அந்த இடத்தில் நான் ஒரு பத்திரிகைப் புகைப்படக்காரராகவும் கடமையாற்ற வேண்டியிருந்தது.

**டோகன் & வைஸ்:** ***போட்ரமில் இது போன்ற நிகழ்வு இதற்கு முன் நடந்திருக்கிறதா? இல்லை, அகதிகள் கடலில் மூழ்குவது அங்கு சாதாரணமாகப் பார்க்கப்படுகிறதா?***

**நிலு்ஃபெர் டெமிர்:** ஆம். கடந்த பன்னிரெண்டு ஆண்டுகளாக போட்ரம் கடற்கரையிலிருந்து பல அகதிகளைப் படம் பிடித்து வருகிறேன். அவர்கள் அனைவரும் போட்ரமுக்கும் கிரேக்கத் தீவான கோஸ்க்கு இடைப்பட்ட இரண்டரை மைல் கடல் பரப்பை இரப்பர் படகின் மூலமே கடந்து சென்றவர்கள். அபாயகரமான இந்தப்பயணத்தில் அய்லனின் விபத்துக்கு முன் பல விபத்துக்கள் நடந்திருக்கின்றன.

சிரிய அகதிகள் மட்டும் இந்த அபாயகரமான பயணத்தில் ஈடுபடவில்லை. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் அகதிகள் பலரை நாம் இங்கே காண முடியும். மத்திய கிழக்குப்பகுதியில் ஒவ்வொரு முறையும் போர் நடக்கும் போதெல்லாம் அகதிகளாக்கப்படும் பொதுமக்கள் போட்ரம், கோஸ் வழியாகத்தான் ஐரோப்பாவுக்குச் செல்கிறார்கள். ஐரோப்பிய யூனியனுக்குள் நுழைய துருக்கியும், கிரீஸூம் தான் பெரும்பாலான அகதிகளுக்கு படிக்கட்டுகளாக இருக்கின்றன.


**டோகன் & வைஸ்:** ***நீங்கள் எடுத்த அந்த புகைப்படம் மிக வேகமாக உலகம் முழுவதும் பரவியதை எப்படி உணர்கிறீர்கள்?***

**நிலுஃபெர் டெமிர்:** ஒருபக்கம், நான் அந்த புகைப்படத்தை எடுக்காமல் இருந்திருக்கலாம். அய்லானின் பிணத்தை படம் பிடித்ததை விட, அந்தக் கடற்கரையில் விளையாடிய அய்லானை போன்ற இன்னொரு சிறுவனை படமெடுத்திருக்கலாம். அய்லானின் இறப்பு என்னுள் பயங்கரமான தாக்கத்தை ஏற்படுத்தி, அன்றைய இரவு முழுவதும் மனதை வருத்தியது. மறுபுறம், இறந்த சிறுவனின் மீது இந்த உலகம் கொண்டிருக்கும் அக்கறையையும், துக்கத்தையும் கண்டு எனக்குள் மகிழ்ச்சி. குறிப்பாக இந்த அகதிகளையெல்லாம் ஐரோப்பாவில் குடியேற என் புகைப்படம் உதவியிருப்பதை நினைத்து மிகவும் சந்தோஷமடைகிறேன். உள்நாட்டுப்போரினால் வெளியேறும் எவரும் இப்படி போகும் வழியிலேயே பிணமாகும் நிலை இனி இருக்கக்கூடாது.

# பாரதியின் வசனக் கவிதைகளில் பேரண்டம் பற்றிய அறிவியல் சிந்தனைகள்

**ம. நவீனா**

இளங்கலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு



பேரண்டத்தைப் பற்றிய ஆராய்ச்சி என்பது இன்று அறிவியல் ஆராய்ச்சிக்கு பெரும் பங்கு வகுக்கிறது. நாளும் புதிய கண்டுபிடிப்புகள் வந்த வண்ணம் உள்ளன. இத்தகைய ஆராய்ச்சிக்கு பல அறிவியல் உபகரணங்கல் தேவைப்பட்டன. ஆனால் உபகரணங்கள் ஒன்றுமே இல்லாத காலகட்டத்தில் வாழ்ந்த பாரதியார் பேரண்டத்தைப் பற்றிய கருத்துக்களை விளக்குவது ஆச்சிரியத்தை தரும் வகையில் அமைகிறது.

பூமி, சந்திரன், செவ்வாய், சனி, புதன், வியாழன், யுரேனஸ், நெப்த்யூன், முதலிய பலநூறு வீடுகள் இவை எல்லாம் கதிர்கள் பட்ட மாத்திரத்திலேயே ஒளியுற நகை செய்கின்றன. தீப்பந்திலிருந்து பொறிகள் வீசுவது போல இவையெல்லாம் ஞாயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டன.

சூரியனை பூமி, சந்திரன், செவ்வாய், சனி, புதன், வியாழன், யுரேனஸ், நெப்த்யூன் போன்ற ஒன்பது துணைக்கோள்களும் சூரியனை நீள்வட்டப் பாதையில் ஒரு வகையான ஈர்ப்பு விசையினால் சுற்றி வருகின்றன. இக்கோள்கள் அனைத்தும் சூரியனில் இருந்து வெடித்துச் சிதறியன என்பது ஆய்வாளர் கருத்து. தானாகவே ஒளிரக்கூடிய தன்மையுடையவை என்பதும் சூரியனிடமிருந்து வெளிப்படுகின்ற கதிர்கள் மூலம் ஒளிப் பெறுகின்றன என்பதையும் தெரிவிக்கிறார். இதன் மூலமாக பாரதியார் பிற மொழி அறிவு மட்டுமல்லாமல் வான சாஸ்திரம் என்று சொல்லப்படும் சிறந்து விளங்கினார். என்கின்ற உண்மையினை இப்பாடல் வரிகளின் மூலம் புலப்படுகின்றன.

# பொது அறிவு

## சின்னச்சின்ன கேள்விகள்

**ச. ரம்யா**
முதலாம் ஆண்டு தமிழிலக்கியம்

- மிகச் சிறந்த ஞாபகசக்தி எவ்வாறு அழைக்கப்படுகிறது
  பாராமென்சியா
- இந்தியாவின் தேசியக் காலண்டர் எது
  சகாப்தம்
- புத்தர் போதனை செய்த மொழியின் பெயர் என்ன
  பாலி மொழி
- நோய்களைக் குணமாக்கும் நிறம் எனக் கருதப்படும் நிறம் எது
  நீலம்

- மனித உடலில் உள்ள எலுபுகளில் அதிகமாக உள்ள பொருள் எது

  கால்சியம் பாஸ்பேட்

- கணினியில் ஒரு கிலோ பைட் என்பது எத்தனை பைட்டுகளுக்குச் சமம்

  *1024* பைட்டுகள்

- இந்திய தேசிய கீதம் பாட நேரம் எவ்வளவு

  *52* நொடிகள்

- ஆகாய விமானங்கள் எந்த உலோகத்தால் செய்யப்படுகின்றன

  டியூராலுமினியம்

- இந்தியாவின் தேசிய விளையாட்டு எது?

  ஹாக்கி

- ஆஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு எது?

  கிரிக்கெட்

- கனடாவின் தேசிய விளையாட்டு எது?

  ஐஸ் ஹாக்கி

- ஜப்பானின் தேசிய விளையாட்டு எது?

  கராத்தே

- அமெரிக்காவின் தேசிய விளையாட்டு எது?

  பேஸ் பால்

- ரஷ்யாவின் தேசிய விளையாட்டு எது?

  செஸ்

- இங்கிலாந்தின் தேசிய விளையாட்டு எது?

  கிரிக்கெட், ரக்பி, கால்பந்து

- உலகில் அதிகமாக பேசப்படும்மொழி யாது?

  சீன மொழி

- உலகில் சுமாராக எத்தனை மொழிகள் உள்ளன?

  சுமார் *7000* மொழிகள்

- உலகில் முதல் விமானம் எப்போது பறந்தது?

  *17.12.1903*

# விடுகதைகள்

**ரேவதி**
மூன்றாம் ஆண்டு தமிழ் இலக்கியம்

- அண்ணன் வீட்டுக்குத் தம்பி போகலாம் தம்பி வீட்டுக்கு அண்ணன் போகமுடியாது
    - உலக்கை, உரல்
- அடிமேல் அடிவாங்கி அனைவரையும் சொக்க வைப்பான்
    - மிருதங்கம்
- அடிக்காத பிள்ளை அலறித் துடிக்கிறான்
    - சங்கு
- அடித்து நொறுக்கி அனலில் போட்டால் ஆவியாகத் தோன்றும் அழகாய் மணக்கும்
    - சாம்பிராணி
- அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம்
    - வளையல்
- ஆயிரம் பேர்கூடி வரும் அழகர் மலை
    - தேர்
- ஆட்டிவிட்டால் ஆடுவது அந்தரத்தில் தொங்குவது
    - ஊஞ்சல்
- இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும்
    - கடிகாரம்
- இவ்வூரிலே தாளித்தால் ஈரோட்டில் மணக்குமாம்
    - தந்தி
- உருவிலே பெரியவன் ஊருக்கு உயர்ந்தவன்
    - கோபுரம்
- ஒரு பெண்ணுக்கு மூன்று கொண்டை

- அடுப்பு
- இனிப்புக்கு எதிரி இதழுக்கு உவமை
    - கோவைப்பழம்
- உலர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ
    - குடை
- எந்த எழுத்து ஏட்டிலில்லை
    - தலை எழுத்து

## அழகுக் குறிப்புகள்

**ம. பிரீத்தி**

தமிழ் இலக்கியம் இரண்டாம் ஆண்டு

- உடல் நிறம் பளபளக்க அவர இலையை சுத்தம் செய்து நன்கு உலர்த்தி தூளாக்கி தினமும் 5 கிராம் காலை உணவிற்கு பின் சாப்பிட்டு வரலாம்.
- முகம் பளபளக்க எழுமிச்சை சாறு பிழிந்த ஆவியை முகத்தில் மூன்று நாட்கள் பிடித்து வரலாம்
- முகப்பொலிவு இஞ்சி சிறு துண்டுகளாக நறுக்கி தேனில் ஊற வைத்து 48 நாட்கள் சாப்பிட்டு வரலாம்.
- முகம் அழகு பெற கச்தூரி மஞ்சள், விரலிமஞ்ச, சோற்றுக்கற்றாளை சம அளவு சேர்த்து அரைத்து முகத்தில் பூசி வர முகம் அழகாகும்.
- நிறம் மாற முருங்கை வேர், துளசி வேர் அரைத்து பாலில் கலந்து பூசி குளித்து வரலாம்.

## விடுகதைகள்

**எஸ்.மீனா**

இரண்டாமாண்டு உயிர் தொழில் நுட்பவியல்

- கொடுக்க முடியும் எடுக்க முடியாது அது என்ன

கல்வி

➲தாழ்ப்பாள் இல்லாத கதவு தானாக மூடித்திறக்கும் கதவு அது என்ன

இனம்

➲ஐந்து ஊருக்கும் ஒரு மைதானம் அது என்ன

உள்ளங்கை

➲புள்ளிகள் இருந்தும் கோலம் போட முடியவில்லை அது என்ன

நட்சத்திரம்

➲எண்ணும்முள்ளும் இல்லாத கடிகாரம் எவரும் பார்க்க முடியாத கடிகாரம் அது என்ன?

இதயம்

➲தீர்க்க முடியாத திணறடிக்கும் கல் அது

விக்கல்

➲போதையின்றி தள்ளாடினாலும் புறப்படும் ஊர் போய் சேருவான் அது என்ன?

கப்பல்

➲கிட்ட இருக்கும் பட்டணம் எட்டி பார்க்க முடியாது அது என்ன

நமது முதுகு

➲கொட்டிக் கிடப்பவன் கோபுரமானவன் அவன் யார்

செங்கல்

➲ஆயிரம் பேர் திரண்டாலும் அணு அளவு கூட தூசி கிளம்பாது அது என்ன

எறும்பு கூட்டம்

## அறிவியல் துறைகளின் அருந்தமிழ்ப் பெயர்கள்

- இலக்குவனார் திருவள்ளுவன்

நன்றி: http://www.newscience.in/

துறைதோறும் தமிழ் வளர வேண்டும். தமிழில் வரும் பிற துறைகள் பற்றிய கட்டுரைகளையும் நூல்களையும் பார்க்கும் பொழுது தமிழ் அறிவியல் துறையில் முன்னேறிவிட்டதுபோல் தோன்றும். ஆனால், உண்மையில் நாம் எட்ட வேண்டிய இலக்கு மிக மிகத் தொலைவில் உள்ளது.தஞ்சாவூரில் உலகத்தமிழ் மாநாடு




நடைபெற்றபோது அறிவியலிலும் தமிழ்! அனைத்திலும் தமிழ்! என்பதே அரசின் முழக்கமாக அமைந்தது. ஆனால், இதனைச் செயல்படுத்தும் வகையில் போதிய துறையறிவும் தமிழ்ப்புலமையும் நிறைந்தவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவில்தான் உள்ளனர். பிற துறையறிவினர் தமிழில் புலமை பெறுவதைக் கடமையாகக் கொள்ள வேண்டும். தமிழ்ப்புலமையாளர்கள், அறிவியல்துறைகளில் தேர்ச்சி பெறுவதைக் கடப்பாடாகக் கொள்ள வேண்டும். ஒரே துறையின் உட்பிரிவாகவும் பல துறைகள் வளர்ந்துள்ளன. ஆனால் அவற்றின் பெயர்களைக்கூட அகராதிகளில் காண இயலவில்லை. இங்கே பெரும்பாலான துறைகளின் பெயர்கள் தமிழில் தரப்படுகின்றன.

1. அகச்சுரப்பியியல் - Endocrinology
2. அடிசிலியல் - Aristology
3. அடையாளவியல் - Symbology
4. அண்டவியல் - Universology
5. அண்டவியல் - Cosmology
6. அணலியல் - Pogonology
7. அருங்காட்சியியல் - Museology
8. அருளரியல் - Hagiology
9. அளவீட்டியல் - Metrology
10. அற்புதவியல் - Aretalogy
11. ஆடவர் நோயியல் - Andrology
12. ஆய்வு வினையியல் - Sakanology
13. ஆவணவியல் - Anagraphy
14. ஆவியியல் - Spectrology
15. ஆறுகளியல் - Potamology

16. இசையியல் - Musicology
17. இந்தியவியல் - Indology
18. இயற்பியல் - Physics
19. இரைப்பையியல் - Gastrology
20. இலக்கிலி இயல் - Dysteleology
21. இறை எதிர் இயல் - Atheology
22. இறைமையியல் - Pistology
23. இறைமையியல் - Theology
24. இன உறுப்பியல் - Aedoeology
25. இன்ப துன்பவியல் - Algedonics
26. இனப் பண்பாட்டியல் - Ethnology
27. இனவியல் - Raciology
28. ஈரிடவாழ்வியல் - Herpetology
29. உடலியல் - Physiology
30. உடற் பண்டுவ இயல் - Phytogeography
31. உடற்பண்பியல் - Somatology
32. உடுவியக்கவியல் - Asteroseismology
33. உணர்வகற்றியல் – Anesthesiology
34. உயிர் மின்னியல் - electro biology
35. உயிர்ப்படிமவியல் - Paleontology
36. உயிர்ப்பொருளியல் - Physiology
37. உயிர்மியியல் - Cytology
38. உயிரித் தொகை மரபியல் - Population Genetics
39. உயிரித்தொகை இயக்க இயல் - Population Dynamics
40. உயிரிய இயற்பியல் - Biophysics
41. உயிரிய மின்னணுவியல் - Bioelectronics
42. உயிரிய வேதியியல் - Biochemistry
43. உயிரிய வேதிவகைப்பாட்டியல் - Biochemical taxonomy
44. உயிரியத்தொழில் நுட்ப இயல் - Biotechnology

45. உயிரியப் பொறியியல் - Bioengineering
46. உயிரியல் - Biology
47. உயிரினக் காலவியல் - Bioclimatology
48. உயிரினச் சூழ்வியல் - Bioecology
49. உருவகவியல் - Tropology
50. உருள்புழுவியல் - Nematology
51. உரைவிளக்கியல் - Dittology
52. உளவியல் - Psychology
53. ஊட்டவியல் - Trophology
54. எகிப்தியல் - Egyptology
55. எண்கணியியல் - Numerology
56. எரிமலையியல் - Volconology
57. எலும்பியல் - Osteology
58. எலும்பு நோய் இயல் - Osteo pathology
59. எறும்பியல் - Myrmecology
60. ஒட்பவியல் - Pantology
61. ஒப்பனையியல் - Cosmetology
62. ஒலியியல் - Phonology
63. ஒவ்வாமை இயல் - Allergology
64. ஒழுக்கவியல் - Ethics
65. ஒளி அளவை இயல் - Photometry
66. ஒளி இயல் - Photology
67. ஒளி உயிரியல் - Photobiology
68. ஒளி விளைவியல் - Actinology
69. ஒளி வேதியியல் - Photo Chemistry
70. ஒளித்துத்த வரைவியல் - Photozincography
71. ஓசையியல் - Acoustics
72. கசிவியல் - Eccrinology
73. கட்டடச்சூழலியல் - Arcology

74. கடப்பாட்டியல் - Deontology

75. கடல் உயிரியல் - Marine biology

76. கடற் பாசியியல் - Algology

77. கண்ணியல் - Opthalmology

78. கணிப்பியல் - Astrology

79. கதிர் மண்டிலவியல் - Astrogeology

80. கதிர் விளைவியல் - Actinobiology

81. கரிசியல் - Hamartiology

82. கரிம வேதியியல் - Organic Chemistry

83. கருத்தியல் - Ideology

84. கருதுகை விலங்கியல் - Cryptozoology

85. கருவியல் - Embryology

86. கருவியல் - Embryology

87. கல்வி உளவியல் - Educational Psychology

88. கலைச்சொல்லியல் - Terminology

89. கழிவியல் - Garbology

90. கனி வளர்ப்பியல் - Pomology

91. கனிம வேதியியல் - inorganic chemistry

92. கனியியல் - Carpology

93. கனியியல் - Pomology

94. காளானியல் - Mycology

95. காற்றழுத்தவியல் - Aerostatics

96. காற்றியக்கவியல் - Aerodynamics

97. காற்றியல் - Anemology

98. கிறித்துவியல் - Christology

99. குடல் புழுவியல் - Helminthology

100. குருட்டியல் –Typhology

- தொடர்ச்சி அடுத்த இதழில்...

# பேசும் படம் (Photography)

❄

❄

❄ த. சுந்தரராஜ்



